**செ.வெ.எண்: 36** **நாள்: 21.12.2016**

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில், தேசிய நுகர்வோர் தினவிழா, மாவட்ட நுகர்வோர் குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியில் எதிர்வரும் 28.12.2016 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட அளவிலான நுகர்வோர் அமைப்பாளர்கள், வட்ட அளவிலான நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பைச் சார்ந்த தன்னார்வ நுகர்வோர் குழு அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம். மேலும், கல்லூரி / பள்ளிகளில் இயங்கி வரும் நுகர்வோர் மன்ற மாணவ / மாணவிகளுக்கு சட்ட விதி மீறல்கள் கண்டறியும் போட்டி, வரைதல் போட்டி, கவிதை / கட்டுரை போட்டி முதலியவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**